க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
கணக்கீடு I
நேரம் : 2 மணித்தியாலம்

01 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. பின்வரும் கூற்றுகளுள் பொறுப்புகளை விரிப்பதற்கு சரியான கூற்று / கூற்றுக்கள் எவையாகும்.
   i. கடந்தகால கொடுக்கல் வாங்கல்களில் இருந்து உருவாகி இருத்தல்.
   ii. தற்காலக்கடப்பாட்டினைக் கொண்டிருத்தல்.
   iii. ஒப்பந்தம் அல்லது சட்டத்தின் அடிப்படையில் உருவாகி இருத்தல்.
   iv. கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டிய காலமும் தொகையும் துல்லியமாக அறியப்பட்டு இருத்தல்.
   1. (i), (ii) சரியாகும் 2. (ii), (iii) சரியாகும்
   3. (iii), (iv) சரியாகும் 4. (ii) மட்டும் சரியாகும்
   5. (i), (ii), (iii) சரியாகும்

02. பின்பற்றப்படும் கணக்கீட்டுத் கொள்கை கைவிடப்பட்டு, புதிய கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்படுமாயின் மீறப்படும் தகவலின் பண்புசார் குணஇயல்பு?
   1. ஒப்பிடல் தன்மை 2. பொருத்தமான தன்மை 3. நம்பகத்தன்மை
   4. நடுநிலைத்தன்மை 5. முழுமைத்தன்மை

03. ஐந்தொகை ஒன்று தொடர்பில் பிழையான கூற்று எதுவாகும்?
   1. அதன் சொத்துப்பக்கம் நிதிப்பிரயோகத்தினை வெளிப்படுத்துகின்றது.
   2. அதன் பொறுப்புப் பக்கம் நிதி மூலத்தினை குறிக்கின்றது.
   3. உரிமையாண்மை, பொறுப்புகள், சொத்துக்கள் என்ற கணக்கீட்டுக் கூற்றுகளை உள்ளடக்கியதாகும்.
   4. அனைத்துத் தகவல்களும் ஐந்தொகைத் திகதியில் உள்ள கணக்கீட்டுக் கூறுகளின் நடைமுறை விலையினைப் பிரதிபலிக்கும்.
   5. வரலாற்று ரீதியான தகவல்களும் மதிப்பீடு செய்யப்பட்ட தகவல்களும் நிரற் படுத்தப்பட்டிருக்கும்.

04. பின்வரும் கூற்றுகளுள் பிழையான கூற்று / கூற்றுகள் எவை?
   i. பொருண்மையற்ற விடயங்கள் கணக்குப் பதிவுக்கு உட்படுத்தப்படுவதற்கு வேண்டியதில்லை.
   ii. காசுக் கணக்கின் சுருக்கம் (காசுப்பாய்ச்சல் கூற்று) காசு அடிப்படையிலும் வருமானக்கூற்று அட்டுறு அடிப்படையிலும் ஐந்தொகை தொடர்ந்தியங்கும் அடிப்படையிலும் தயாரிக்கப்படும்.
   iii. நிதிக்கூற்றுகளில் தகவல்கள் சட்ட வடிவத்திலும் உழைக்கப்படும் பயனின் அடிப்படையிலேயே நிரற்படுத்தப்படுகின்றன.
   iv. வரலாற்றுக் கிரய எண்ணக்கருவினால் நிதியறிக்கையில் வெளிப்படுத்தப்படும் தகவல்களின் பொருத்தப்பாட்டுத் தன்மை பாதிப்புறும்.
   1. (i) 2. (i), (ii) 3. (i), (iv) 4. (iii), (iv) 5. (iv)

05. நிறுவனம் ஒன்றில் ரூபா 50,000 கிரயமான இருப்புக்கள் தீயால் அழிவடைந்து விட்டன. இது தொடர்பில் நட்ட ஈடாக முழுத்தொகையும் கிடைத்தது. இந்நடவடிக்கைகளினால் வியாபாரத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டின் பெறுமானத்தில் எத்தகையதாக்கத்தினை விளைவிக்கும்?
   1. சொத்திலும், உரிமையாண்மையிலும் குறைவு.
   2. சொத்திலும், பொறுப்பிலும் குறைவு
   3. சொத்தில் குறைவும், உரிமையாண்மையில் அதிகரிப்பும்
   4. சொத்திலும், உரிமையாண்மையிலும் அதிகரிப்பு
   5. மாற்றம் எதுவும் ஏற்படாது.

06. குறித்ததோர் மாதத்தில் வணிகமொன்று ரூபா 50,000 கிரயமான இருப்புகளினை ரூபா 80,000 கடனுக்கு விற்பனை செய்தது மற்றோர் வாடிக்கையாளரிடமிருந்து விற்பனை முற்பணமாக ரூபா 20,000 னை பெற்றிருந்தது. இக்கொடுக்கல் வாங்கல்களினால் குறித்த இம்மாதத்திற்கான வருமானம் செலவு மற்றும் இவற்றினை இனங்காண்பதில் பிரயோகிக்கப்படும் கணக்கீட்டு எண்ணக்கரு முறையே.

1.	ரூபா 80,000	ரூபா 50,000	தேறல் எண்ணக்கரு
2.	ரூபா 80,000	ரூபா 50,000	அட்டுறு எண்ணக்கரு
3.	ரூபா 100,000	ரூபா 50,000	தேறல் எண்ணக்கரு
4.	ரூபா 50,000	ரூபா 50,000	அட்டுறு எண்ணக்கரு
5.	ரூபா 80,000	ரூபா 50,000	இணைத்தல் எண்ணக்கரு

07. நிறுவனமொன்று ரூபா 15,000 கொள்வனவை மேற்கொண்டது. இக் கொடுக்கல் வாங்கல் தவறுதலாக கொள்வனவுக் கணக்கிலும் கடன்கொடுத்தோர் கணக்கிலும் வரவுப்பக்கங்களில் ரூபா 1500 எனப்பதியப்பட்டது. இத்தவறினால் எழுந்த தொங்கல் கணக்கு மீதியும் இலாபத்திலும் ஏற்பட்டிருக்கும் விளைவும்.

	தொங்கல் கணக்கு	இலாபம்
1.	வரவு மீதி ரூபா 3,000	குறையும் ரூபா 13,500
2.	செலவு மீதி ரூபா 3,000	அதிகரிக்கும் ரூபா 13,500
3.	வரவு மீதி ரூபா 3,000	அதிகரிக்கும் ரூபா 13,500
4.	வரவு மீதி ரூபா 30,000	குறையும் ரூபா 13,500
5.	செலவு மீதி ரூபா 3,000	குறையும் ரூபா 13,500

08. சுரேஸ் வியாபாரத்தில் ஒக்டோபர் மாத வங்கிக் கூற்று மீதியானது ரூபா 42,000 ஐ காட்டியது. ஒக்டோபர் மாத காசேட்டின் வங்கி நிரலின் வரவு வைக்கப்பட்டிருந்த காசோலை ரூபா 12,000ம் செலவு வைக்கப்பட்டிருந்த காசோலை ரூபா 16,000ம் வங்கிக் கூற்றில் காணப்படவில்லை. 31 ஒக்டோபர் 2011 ல் காசேட்டு வங்கி மீதியானது வங்கிக் கூற்று மீதியில் இருந்து எவ்வளவு தொகையினால் அதிகரித்தது / குறைந்து காணப்படும்.

1. ரூபா 16,000 ல் அதிகரிக்கும் ரூபா 12,000 தினால் குறைந்தும்
2. ரூபா 11,000 ல் அதிகரிக்கும் ரூபா 17,000 தினால் குறைந்தும்
3. ரூபா 21,000 ல் குறைந்தும் ரூபா 12,000 தினால் அதிகரிக்கும்
4. ரூபா 12,000 ல் அதிகரிக்கும் ரூபா 16,000 தினால் குறைந்தும்
5. ரூபா 4,000 தினால் குறைந்து காணப்படும்.

09. பேரேடுகள் பேணப்படும் கட்டுப்பாட்டுக் கணக்குகளில் முக்கியத்துவம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் மிகவும் பொருத்தமானது

1. மேலதிக பேரேட்டினைப் பயன்படுத்தாது பொதுப்பேரேட்டில் பரீட்சை மீதி தயாரிக்க முடிதல்.
2. அதிக கணக்குகள் பிரதி செய்வதனை குறைத்து நேரவிரயத்தினை தவிர்த்துக் கொள்ள முடிதல்
3. நேரடியாக பொறுப்புக் கூறக்கூடிய அகக்கட்டுப்பாட்டு முறையை ஏற்படுத்த முடியும்.
4. தாமதமின்றி முடிவுக் கணக்குகளினைத் தயாரிக்க முடியும்.
5. தவறுகள் நடந்த பேரேடுகளை மிக விரைவாக இனங்காணல்.

10. பின்வரும் கூற்று / கூற்றுகளில் எது சரியானவை / சரியானது

a. சொத்தொன்றின் கீழ்கொண்டு செல்லும் பெறுமதி என்பது அதன் திரண்டதேய்மான ஏற்பாடு ஊறுசேத இழப்பு என்பன சொத்தின் கிரயப் பெறுமதியில் இருந்து கழித்தபின் கிடைக்கும் பெறுமதி.
b. சொத்துப்பற்றிய அறிவும் சம்மதமும் கொண்டபகுதியினர்க்கிடையிலான பரிமாற்றப்படக் கூடிய சொத்தின் பெறுமதி நியாயமான பெறுமதியாகும்.
c. நிதிக்கூற்றுகளில் நிரற்படுத்தப்படும் கூறுகளின் தவறுகள் அல்லது தவறான வெளிப்படுத்தல், நிதிக்கூற்றுக்களினை உபயோகிப்போரின் பொருளியற் தீர்மானத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அமையின் அவ்விடயம் பொருண்மையற்றதாக கருதப்படும்.
d. வரலாற்றுக்குரிய எண்ணக்கருவினால் சொத்தின் பெறுமதி குறைவாகவும் இலாபம் உயர்வாகவும் காட்டப்படுவதற்கு வகை செய்கிறது.

1. a, b　　2. a, c, d　　3. a, b, d
4. a, b, c, d　　5. b, d

11. Thermo Ltd இன் நிதி ஆண்டு 31.03 ல் முடிவடைகிறது. 25 மார்ச் 2013 ல் ரூபா 300,000 வான இருப்புகளுக்கு கட்டளையிட்டது. பொருட்கள் 31.03.2012 ல் களஞ்சியத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் கொள்வனவு கிரயப்பட்டியலில் வழங்குனரிடமிருந்து 03.04.2012 ல் கிடைக்கப் பெற்றது. ஆனால் கம்பனி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த பொருட்களினை 31.03ல் இருப்பு மதிப்பீட்டில் உள்ளடக்கியிருந்தது. எவ்வெண்ணக்கருவுடன் இது ஒத்துச் செல்கிறது.

1. முன்னெச்சரிக்கை　　2. வரலாற்றுக்கிரயம்　　3. அட்டுறு
4. பொருண்மை　　5. அலகுசார்

12. பண்டங்களின் விற்பனை மூலம் ஈட்டப்பெறும் வருமானம் இனங்காணப்படுவதற்கு திருப்திப்படுத்த வேண்டிய நிபந்தனைகளில் பொருத்தமற்றது.

1. பண்டங்களில் உள்ள உரிமையினையும் குறிப்பிடத்தக்க ஆபத்தினையும் வெகுமதியினையும் நிறுவனம் அதன் கொள்வனவாளருக்கு மாற்றியிருத்தல்.
2. வருமானத்தின் அளவு நம்பகமாக அளவிடக்கூடியதாக இருத்தல்.

3. கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய பொருளாதார நலன் நிறுவனத்திற்குள் உட்பாயக் கூடிய சாத்தியம் காணப்படல்.
4. கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புபட்ட ஏற்பட்ட கிரயம் அல்லது ஏற்படக்கூடிய கிரயம் நம்பகரமாக அளவிடக் கூடியதாக இருத்தல்.
5. விற்கப்பட்ட பொருளுக்கான பிரதிபயனை உடன் பெறுதல்

13. சேனாலி ஒரு தனி வியாபார உரிமையாளர் 2012 ஏப்ரல் 30 இல் பின்வரும் மீதிகள் காணப்பட்டன. மொத்தச் சொத்துக்கள் ரூபா 2,500,000 மொத்தப் பொறுப்புகள் ரூபா 500,000 2012 மே மாதம் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.
   1. கடன் விற்பனை ரூபா 625,000 இவ் விற்பனைப் பொருளின் கிரயம் ரூபா 375,000
   2. உரிமையாளர் எடுப்பனவாக ரூபா 150,000 பெறுமதியான பொருட்களை பெற்றுக் கொண்டார். இவைகளின் விற்பனை விலை ரூபா 200,000
   3. மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் (கடன் விற்பனை) ரூபா 30,000 கிரயமான பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.
   4. ஒரு வருமதியாளர் நிறுவனத்திற்கு ரூபா 100,000 செலுத்த வேண்டியிருந்தும் ரூபா 90,000 மட்டும் செலுத்தினார்.
   மிகுதி அறவிடமுடியாக் கடனாகக் கொள்ளப்பட்டது.
   2012 மே 31 இல் மூலதன இறுதி மீதி

1. ரூபா 2,078,000 2. ரூபா 2,070,000 3. ரூபா 1,570,000
4. ரூபா 1,578,000 5. ரூபா 1,578,500

14. பின்வரும் தகவல்கள் தாஸ் நிறுவனம் (தனி உரிமை) தொடர்பாக 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது.

டிசெம்பர் 31 ல் மீதி	2012
மொத்த சொத்துக்கள் அதிகரிப்பு	ரூ. 19,000,000
மொத்த பொறுப்புகள் அதிகரிப்பு	ரூ. 400,000
2012 வருடத்தில் இடப்பட்ட மூலதனம்	ரூ. 900,000
வருடத்தில் பெற்ற எடுப்பனவுகள்	ரூ. 1,400,000

2012 ஆம் ஆண்டிற்கான நிகர இலாபம் அல்லது நட்டம்

1. ரூபா 11,000,000 இலாபம் 2. ரூபா 1,900,000 இலாபம் 3. ரூபா 2,000,000 இலாபம்
4. ரூபா 1500,000 நட்டம் 5. ரூபா 500,000 நட்டம்

15. புதிய பங்காளர் சேரும் போது நன்மதிப்பு மறுமதிப்பீடு செய்யப்படாவிடின் ஏற்படக்கூடிய விளைவு.
   1. சொத்துக்களின் கிரயம் குறைத்துக் காட்டப்படும்.
   2. பழைய பங்காளர் நன்மதிப்பு பெறுமதியின் மிகை, குறைப்பில் பங்கு கொள்வர்.
   3. வருமானக் கூற்றில் இலாபம் மிகைப்படுத்திக் காட்டப்படும்.
   4. புதிய பங்காளர் சொத்தின் மிகை குறைவில் பங்கேற்பர்.
   5. பங்காளரின் சொத்துகளுக்கு இருக்கின்ற உரிமை கணக்குப்புத்தகங்களில் சரியான முறையில் பிரதிபலிக்க மாட்டாது.

16. நிறுவனம் ஒன்று நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது இருப்புச் சரக்கின் பெறுமதி கிரயத்தில் மட்டும் கணிப்பீடு செய்து உட்படுத்தி இருந்தது. ஆனால் ஒரு தொகைப் பண்டங்கள் கிரயத்திலும் ரூபா 15,000 அதிகரித்த பெறுமதியிலும் ஏனையவை ரூபா 20,000 குறைந்த பெறுமதியிலும் காணப்பட்டது கண்டறியப்பட்டது. இதற்கான திருத்தம் பின்வரும் உருப்படிகளில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தும்.

	மொத்த இலாபம்	விற்பனைக் கிரயம்	தேறிய இலாபம்	நடப்புச் சொத்து
1.	குறையும்	அதிகரிக்கும்	அதிகரிக்கும்	குறையும்
2.	அதிகரிக்கும்	குறையும்	குறையும்	அதிகரிக்கும்
3.	மாற்றமில்லை	மாற்றமில்லை	குறையும்	குறையும்
4.	மாற்றமில்லை	மாற்றமில்லை	அதிகரிக்கும்	அதிகரிக்கும்
5.	அதிகரிக்கும்	குறையும்	குறையும்	குறையும்

17. நிறுவனமொன்று மேற்கொண்டகடன் விற்பனைகள் தொடர்பான தகவல்கள் வருமாறு மொத்த கடன் விற்பனைகள் பட்டியல் விலை ரூபா 400,000 விற்பனைகள் மீதான வியாபார கழிவு 10%
விற்பனை விலையில் 20% பெறுமதி சேர்வரி சேர்க்கப்பட்டதாகும்.
பின்வரும் கணக்குகளில் காட்டத்தக்க சரியான தொகைகளைக் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.

	விற்பனை	கடன்படுனர்	பெறுமதி வரி கணக்கு
1.	ரூபா 400,000	ரூபா 432,000	ரூபா 32,000
2.	ரூபா 360,000	ரூபா 360,000	ரூபா 72,000
3.	ரூபா 360,000	ரூபா 432,000	ரூபா 72,000
4.	ரூபா 300,000	ரூபா 360,000	ரூபா 60,000
5.	ரூபா 352,000	ரூபா 432,000	ரூபா 80,000

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 18ம் 19ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் ரூபா 180,000 நேர்கூலி ரூபா 20,000
ஆரம்ப குறைவேலை (மூலக்கிரயம்) ரூபா 60,000 இறுதி குறைவேலை (மூலக்கிரயம்) ரூபா 20,000
முற்றுப்பெற்ற பொருட்களின் களஞ்சியப்படுத்தல் செலவு ரூபா 36,000
உற்பத்திக் கிரயத்தில் 60% மூலக்கிரயமாகும்

18. உற்பத்திக் கிரயம் யாது?
   1. ரூபா 300,000 2. ரூபா 200,000 3. ரூபா 400,000
   4. ரூபா 436,000 5. ரூபா 336,000

19. தொழிற்சாலை மேந்தலைக்கிரயம் யாது?
   1. ரூபா 60,000 2. ரூபா 76,000 3. ரூபா 160,000
   4. ரூபா196,000 5. ரூபா 96,000

20. ஐயக்கடன் ஏற்பாட்டில் மேற்கொண்ட அதிகரிப்பு பின்வருவனவற்றுள் எவ்விளைவினைத் தரும்.
   1. தொழிற்சாலை மூலதனத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தும்
   2. தொழிற்படு மூலதனத்தில் குறைவை ஏற்படுத்தும்
   3. பொறுப்பில் அதிகரிப்பை ஏற்படுத்தும்
   4. தேறிய இலாபத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தும்
   5. சொத்துக்களில் அதிகரிப்பை ஏற்படுத்தும்

21. வரையறுத்த பொது கம்பனி ஒன்றின் உரிமையாண்மை அதிகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையாதது?
   1. உரிமைப் பங்குகள் காசுக்கு வழங்கப்படுவதால்
   2. உரிமைப் பங்குகளும் முன்னுரிமைப் பங்குகளும் காசுக்கு வழங்கப்படுவதால்
   3. உபகார பங்குகள் வழங்கப்படுவதால்
   4. கம்பனியின் சொத்துக்கள் மிகைப் பெறுமதியில் மறுமதிப்பிடப்பட்டு பதிவிடப்படல்.
   5. கம்பனி ஆண்டொன்றில் உழைத்த இலாபத்தில் பங்கு இலாபம் செலுத்தும் வீதம் 50 ஆக இருத்தல்.

22. கணேஸ் வரையறுத்த கம்பனி அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு இடைக்காலப் பங்கு இலாபமாக 10% பங்கு இலாப வரியினை கழித்த பின்னர் ரூபா 180,000 இனை வழங்கியது. இக்கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கான குறிப்பேட்டு வடிவிலான பதிவு

1.	இடைக்காலப் பங்கு இலாபக்கணக்கு	வரவு	ரூ. 180,000	
	காசுவங்கிக் கணக்கு	செலவு		ரூ. 180,000
2.	இலாபநட்ட பகிர்வுக் கணக்கு	வரவு	ரூ. 180,000	
	காசுவங்கிக் கணக்குச்	செலவு		ரூ. 180,000
3.	இடைக்காலப்பங்கு இலாபக் கணக்கு	வரவு	ரூ. 180,000	
	பங்கு இலாப வரிக்கணக்கு	வரவு	ரூ. 20,000	
	காசு வங்கிக் கணக்கு	செலவு		ரூ. 200,000
4.	இலாப நட்டப் பகிர்வுக் கணக்கு	வரவு	ரூ. 200,000	
	பங்கு இலாப வரிக்கணக்கு	செலவு		ரூ. 20,000
	காசு வங்கிக் கணக்கு	செலவு		ரூ. 180,000
5.	இலாப நட்டப்பகிர்வுக் கணக்கு	வரவு	ரூ. 180,000	
	பங்கு இலாப வரிக்கணக்கு	செலவு		ரூ. 18,000
	காசு வங்கிக் கணக்கு	செலவு		ரூ. 162,000

23. வரையறுத்த கம்பனி ஒன்றின் நிதி கூற்றுகள் ஓர்நிதியாண்டு முடிவடைந்து ஆறுமாத காலத்தினுள் பங்குதாரர்களுக்கும் ஏனையோர்க்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். என்னும் சட்டக் கட்டுப்பாடு காணப்படுவதற்கு காரணமாக அமைந்த கணக்கீட்டுத் தகவல்களின் அளவு சாரா பண்புக்கூறு.
   1. நம்பகத்தன்மை 2. பொருத்தப்பாட்டுத் தன்மை
   3. ஒப்பிடக்கூடியதன்மை 4. விளங்கிக் கொள்ளக் கூடியதன்மை
   5. மாறாத்தன்மை

24. இலங்கை கணக்கீட்டு நியமம் 01 நிதிக் கூற்றுகளை பயன்படுத்துவோரின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துகின்ற விடயங்களினை எவ்வாறு வரையறை செய்கிறது?
1. செயற்படுத்த முடியாதவை 2. பொருண்மையாண்மை
3. நியாயமான முன்னிலைப்படுத்தல் 4. முக்கியத்துவமும் திரட்சியும்
5. ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

25. இலங்கை கணக்கீட்டு நியமம் 2 (இருப்புக்கள்) என்பதற்கு அமைய தொக்குகளினை தற்போதைய நிலைக்கும் தற்போதைய இடத்திற்கும் கொண்டு வருவதில் இறுக்கப்படும் அளவிற்கு மாத்திரம் அத்தொக்குகளிற்குள் உள்வாங்கப்படும் கிரயங்கள்
1. பொருட்காவுகை கிரயங்கள் 2. கையாள்கை கிரயங்கள்
3. ஏனைய கிரயங்கள் 4. இறக்குமதி தீர்வை
5. மேற்கூறிய அனைத்தும்

ரவி நிறுவனத்தின் சரக்கிருப்பு உருப்படி தொடர்பான தகவல்கள் கீழ்வருமாறு 2013 ஜனவரி மாதத்திற்கு

திகதி	விபரம்	அலகுகள்	அலகுகிரயம் ரூ.
2013.01.01	மீதி இருப்பு	2000	50
2013.01.14	கொள்வனவுகள்	4000	80
2013.01.20	கொள்வனவுகள்	6000	90
2013.01.21	விற்பனைகள்	11000	-

26. சரக்கிருப்பு வழங்கலின் போது நிறையிட்ட சராசரி முறையைப்பயன்படுத்தி இருப்பின் 2013.01.31 இல் உள்ளவாறான சரக்கிருப்பின் கிரயம் என்ன?
1. ரூ. 50,000 2. ரூ. 73,000 3. ரூ. 80,000
4. ரூ. 86,000 5. ரூ. 90,000

27. சரக்கிருப்பு வழங்கலின் போது "முதல் உள் முதல் வெளியே" (FIFO) முறையைப் பயன்படுத்தி இருப்பின் 2013 ஜனவரி மாதத்திற்கான விற்பனைக் கிரயம் என்ன?
1. ரூ. 530,000 2. ரூ. 860,000 3. ரூ. 870,000
4. ரூ. 960,000 5. ரூ. 990,000

28. கம்பனி ஒன்று 20 ரூபா விலையில் 100000 சாதாரண பங்குகளை வழங்கியது. ஊழியர்கள் விண்ணப்பப் பணம் செலுத்தத் தேவையில்லை ஒதுக்கப்பட்ட பின் அவர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும் 90,000 பங்குகளுக்கு பொதுமக்களிடம் இருந்து மனுப்பணம் கிடைத்தது. 60,000 பங்குகளுக்கு ஊழியர்களிடம் இருந்து மனுக்கிடைத்தது பங்குகள் விகிதாசார மீளளிக்கப்பட்ட மிகை மனுக்கட்டணம் எவ்வளவு?
1. ரூ. 1000,000 2. ரூ. 600,000 3. ரூ. 2000,000
4. ரூ. 800,000 5. ரூ. 1984,000

29. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி ஒன்றில் பிரசுர நிதிக் கூற்றுகளின் கூறுகளாக அமைபவை
1. வியாபாரக் கணக்கு, இலாபநட்டக் கணக்கு, ஐந்தொகை.
2. உற்பத்திக் கணக்கு, வியாபாரக் கணக்கு, இலாபநட்டக் கணக்கு, ஐந்தொகை
3. வருமானக் கூற்று, உற்பத்திக் கணக்கு, ஐந்தொகை.
4. வருமானக் கூற்று, நிதிநிலமைக்கூற்று, உரிமைமாற்றக் கூற்று காசுப் பாய்ச்சல் கூற்று குறிப்புக்களும் கொள்கைகளும் .
5. வருமானச்செலவுக் கணக்கு, ஐந்தொகை, காசுப்பாய்ச்சல் கூற்று.

30. இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இற்கு இணங்க நிதியறிக்கைகளை முன்னிலைப்படுத்துதலில் கவனத்தில் கொள்ளப்படும் எண்ணக்கருக்களின் தொகுதியாக அமைவது.
1. அட்டுறு எண்ணக்கரு, தொடர்ந்து செல்லல், இணைத்தல் எண்ணக்கரு, எதிரீடு செய்தல்.
2. தொடர்ந்து செல்லல், அட்டுறு அடிப்படை, கொள்கை மாறாமை, ஒப்பீடு செய்தல்.
3. பொருண்மை, நிதி அடிப்படை, அட்டுறு அடிப்படை, ஒப்பீடு செய்தல்.
4. தொடர்ந்து செல்லல், அட்டுறு அடிப்படை, கைக்கிட்டிய, முன்னெச்சரிக்கை
5. காசு அடிப்படை, அட்டுறு அடிப்படை, கொள்கை மாறாமை, எதிரீடு செய்தல்

- **31 – 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையளிக்குக.**

31. பங்குடமை ஒன்றில் பங்காளர் நடப்பு கணக்குகளுக்கும் மூலதனக் கணக்குகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் .
நடப்புக் கணக்கு 1. ……………………………………………………………………
2.……………………………………………………………………

மூலதனக்கணக்கு 1. ……………………………………………………………………..

2.……………………………………………………………………….

32. A,B என்பவர்கள் இலாபநட்டங்களைச் சமனாகப் பங்கிடும் பங்குடமை ஒன்றில் நன்மதிப்பு ரூபா 200,000 என மதிப்பிடப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. இந்நிலையில் புதிய பங்காளர்கள் C1/5 இலாபப் பங்குடன் சேர்க்கப்பட்டு அவர் தனது நன்மதிப்புப் பங்கினை காசாக செலுத்தினாரெனில் பதிவிடுவதற்கான நாட்குறிப்புப் பதிவு யாது?

………………………………………………………………………………………………………

33. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்ட இயந்திமொன்றின் கீழ் கொண்டு வந்த பெறுமதி 01.01.2012 இல் ரூபா 280,000 ஆகும். இயந்திரங்களுக்கு கிரயத்தில் 10% பெறுமானத் தேய்விடப்படுகின்றது.
இயந்திரத்தின் கிரயம் யாது ………………………………………………

31 டிசம்பர் 2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு யாது ……………………

34. குறித்த கணக்கீட்டுக் காலப்பகுதியில் கடன்பட்டோரில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 30,000 ஆகும். குறித்த கணக்காண்டில் மொத்த விற்பனை ரூபா 600,000 ஆகும். மொத்த விற்பனையில் 75% கடன் அடிப்படையிலானதாகும். கடன்பட்டோருக்கு கழிவுகள் அனுமதிக்கப்படவும் இல்லை. அறவிடமுடியாக்கடன் எதுவும் ஏற்படவும் இல்லை எனில் குறித்த கணக்காண்டில் கடன்பட்டோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட காசு எவ்வளவு?

……

35. 31 டிசம்பர் 2012 இல் வருமானச் செலவுக் கணக்கு மற்ற வேண்டிய ஆயுள் சந்தா வருமானம் எவ்வளவு?

……

36. 31 டிசம்பர் 2012 இல் ஆயுட் சந்தா கணக்கில் முன் கொண்டு செல்லப்பட்ட மீதி எவ்வளவு?

……

37. பின்வருவனவற்றைப் பதிவு செய்வதற்குப் பயன்படும் மூல ஆவணம் முதன்மையேடு என்பவற்றைக் குறிப்பிடுக?

	மூல ஆவணம்	முதன்மையேடு
1. நுகர்வுக்காக கடனுக்கு கொள்வனவு செய்த எழுதுகருவிகள்	………………..	………………
2. காசாக மூலதனமிடல்	……………….	……………...
3. ஐயக்கடன் ஏற்பாடு	……………….	………………
4. நிலுவை வாடகை	………………	………………

38. வியாபாரமொன்றின் பங்குடமை ஒப்பந்தப்படி பங்காளரொருவரினால் இடப்படும் மூலதனத்திற்கு இவர் வருடாந்தம் 10% வட்டியினைப் பெறுவதற்கு உரித்துடையவராவார். வெளிச்செல்லும் பங்காளராகிய பியால் மேற்கூறப்பட்ட வாசகத்தின் படி தான் இளைப்பாறும் நேரத்தில் தனக்கான உரிமைத்தொகையினை தொகையை தீர்வு செய்தல் வேண்டும். இல்லையேல் இத்தொகைக்கு வெளிச்செல்ல முன்னர் செலுத்திய 10% வட்டியை செலுத்த வேண்டுமென மற்றைய பங்காளர்களினை வற்புறுத்துகிறார். பியாலக்குச் செலுத்த வேண்டிய இத்தொகையை இவர் இளைப்பாறும் நேரத்தில் தீர்வு செய்யவில்லை எனின் பியால் தனது கடன்தொகைக்கு 10 வீதவட்டியினை பெறுவதற்கு உரித்துடையவரா? என்பதனை காரணத்துடன் விளக்குக?

……

39. நிறுவனமொன்றில் 2012.03.31 இல் மொத்தச் சொத்துக்கள் மொத்தப் பொறுப்புக்கள் முறையே ரூ. 1000,000, ரூ. 300,000 ஆகும். இத்தொகையைக் கணித்த பின்னர் பின்வரும் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டன. 2012 ஏப்ரலில் பொருளை விற்பதற்காக வாடிக்கையாளரிடம் இருந்து முற்பணமாக பெறப்பட்ட ரூ. 20,000 மானது வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. 2012 மார்ச் மாதத்திற்கான மின்சாரச் செலவு ரூபா 4,000 பதியப்படாமல் விடுபட்டிருந்தது. ரூ. 10000 க்கான விற்பனைப் பட்டியல் ஒன்று விற்பனை நாளேட்டில் இருமுறை பதியப்பட்டிருந்தது. மேற்கூறிய பிழைகளை திருத்திய பின்னர் மொத்தச் சொத்துக்கள் மொத்தப் பொறுப்புக்கள் முறையே

……

40. 31.03.2012 ல் முடிவுற்ற ஆண்டுக்கு செயற்பாட்டினால் உருவான காசு ரூபா 260,000 மாக இருந்தது. 2012.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் என்பவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு (குறைவு) கடன்கொடுத்தோர் ரூ. (20,000) சென்மதி செலவுகள் ரூ. 25.000 சரக்கிருப்புக்கள் ரூ. (15,000) கடன்பட்டோர் ரூபா 40,000 முற்பணச் செலவுகள் ரூபா 5,000 வங்கிக் கடன் வட்டி ரூ. 10,000

இவ்வருடத்திற்கான ஆதனம் பொறி உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு ரூ. 75,000 ஆகும்.

1. 2012.03.31 ல் முடிவுற்ற ஆண்டுக்கான மொத்த இலாபம்? ………………………………..

41. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் தவறாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

கடன்பட்டோர் நிலுவைகள் எதிலும் இருந்து எதிர்காலத்தில் காசுப்பாய்ச்சல் நிகழ்வது சாத்தியமற்று இருப்பினும் அதனை சொத்தாக காட்டுதல் வேண்டும்	
தொழில் முயற்சியினை ஒடுக்கி விடும் பொழுது மட்டுமே அதன் மூலம் உழைக்கப்பட்ட இலாபத்தினை சரியாக அளவிடுவதற்கு முடியும்	
வருமானக் கூற்று ஒன்றில் உண்மையான தகவல்களும் மதிப்பீடு செய்யப்பட்ட தகவல்களும் உள்ளடக்கப்படுகின்றன.	
பங்குடமை ஒன்றில் புதிய பங்காளன் அனுமதிக்கப்படும் பொழுது கணக்கில் காட்டப்படாது இருக்கும் நன்மதிப்பிற்கான பிரதி பயன் முன்னைய பங்காளரின் இலாபநட்ட விகிதாசாரத்திற்கு ஏற்ப நிர்ணயிக்கப்படும்.	

42. பின்வரும் சந்தர்ப்பங்களில் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் படி கணக்கீட்டு பதிவினைத் தருக?

1. நடைமுறையல்லாத சொத்து முதல்முறையாக ரூபா 50,000ல் மீள் மதிப்பீட்டு குறைவு ஏற்படல்?

………………………………………………………………………………………………………..

2. நடைமுறையல்லாத சொத்து முதல்முறையாக ரூபா 75,000 னால் மிகையாக மதிப்பிடப்பட்டு பதிவு செய்தல்?

……………………………………………………………………………………………………….

43. நாதன் வியாபாரம் 2012.04.01 இல் தொழில் முயற்சி ஒன்றினை ரூபா 300,000 ஐ மூலதனமாக ஈடுபடுத்தி ஆரம்பித்தார்.

2012.03.31 இல் உள்ளபடியான நிலமைக்கூற்று கீழ்வருமாறு

உரிமையாண்மை	460,000	ஆதனம் பொறி உபகரணம்	540,000
வங்கிக் கடன்	200,000	நடைமுறைச் சொத்து	300,000
நடைமுறைப் பொறுப்பு	340,000	காசு வங்கி	160,000
	1000,000		1000,000

மேலதிக தகவல்கள்

1. பெறப்பட்ட வங்கிக் கடனில் ரூபா 50,000 ம் வட்டி ரூபா 10,000 இவ்வாண்டில் மீளச்செலுத்தப்பட்டது.
2. ஆதனம் பொறி உபகரணங்களுக்கு இவ்வாண்டில் கிரயப்பெறுமதியில் ஆண்டுக்கு 10% ம் பெறுமானத் தேய்விடப்பட்டது.
3. நாதன் எடுப்பனவு செய்த காசு ரூபா 50,000 இருப்புக்கள் ரூபா 25,000 ஆக இருந்தது.

2013.03.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கு செயற்பாட்டு நடவடிக்கையினால் தேறிய காசினை கணிக்குக.

……

44. 2013.03.31லும் 2013.04.30லும் வங்கி இணக்கக் கூற்றுகள் கீழ்வருமாறு

	2013.03.31	2013.04.30
திருத்திய காசேட்டு வங்கி மீதி	18,000	29,000
மாற்றப்படாத காசோலைகள்	25,000	35,000
	43,000	64,000
வசூலிக்கப்படாத காசோலைகள்	15,000	36,000
வங்கிக்கூற்றின் படியான வங்கிமீதி	28,000	28,000

மார்ச் மாதம் மாற்றப்படாதிருந்த வசூலிக்கப்படாதிருந்த காசோலைகள் அனைத்தும் ஏப்ரல் மாதத்தில் மாற்றப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் மாதத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 12,000 காசோலை ஒன்று மறுக்கப்பட்டு திரும்பியுள்ளது. வங்கிக்கூற்றுப்படி ஏப்ரல் மாதத்தில் மாற்றி வழங்கப்பட்ட காசோலைகளின் மொத்தம் ரூபா 72,000 ஆக இருந்தது.

1. ஏப்ரல் மாதத்தில் நிறுவனம் வைப்புச் செய்த காசோலைகளின் பெறுமதி …………………
2. ஏப்ரல் மாத்தில் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி ………………

45. கம்பனியொன்றினால் 2011.04.01ல் ரூ. 500,000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் ஒன்று 2013.04.01 இல் ரூபா 700,000 ஆக முதற்தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இத்திகதி வரை ஆண்டுக்கு 20 வீதம் நேர்கோட்டு முறையில் தேய்விடப்பட்டது. 2013.04.01ல் இன்னும் எஞ்சியுள்ள பயன்தரு பாவனைக்காலம் 10 ஆண்டுகள் எனவும் மதிப்பிடப்பட்டது. நேர்கோட்டு முறையில் தேய்விடப்படும்.
மீள்மதிப்பு காரணமாக 2014.03.31 இல் உள்ளவாறான உரிமையாண்மையில் ஏற்பட்ட தேறிய விளைவு?

…………………………………………………………………………………………………….

46. கணனிகளை வாங்கி விற்கும் நிறுவனம் ஒன்றின் 2013 ஜனவரி மாதத்திற்கான கொள்வனவு விற்பனை சார் விபரம் கீழ்வருமாறு.

திகதி	மீதி	கொள்வனவு	அலகுவிலை	விற்பனை அலகு
01	100		300	
05		400	350	
10				300
25				100

இருப்பு வழங்கல் விலையிடலுக்கு முதல் உள்முதல் வெளியே முறை பயன்படுத்தப்பட்டு 2013 ஜனவரி மாதத்திற்கு கணிக்கப்பட்ட இலாபம் ரூபா 45,000 மாக இருந்தது.
இருப்பு வழங்கல் விலையிடலுக்கு WAC நிறையளித்தசராசரி முறை பயன்படுத்தப்பட்டு இருப்பின் இலாபம் எவ்வளவு?

…………………………………………………………………………………………………….

47. பின்வரும் தகவல்களின் அடிப்படையில் நிறுவனத்தின் காசுவட்டம் எத்தனை நாட்கள்?
ஆரம்ப இருப்பு 10,000 இறுதி இருப்பு 15,000 கொள்வனவுகள் ரூபா 130,000
சராசரி கடன் கொடுத்தோர் ரூபா 6,500 கடன் சேகரிப்புக் காலம் 30 நாட்கள் வருடத்தில் 360 நாட்கள் எனக்கொள்க?

…………………………………………………………………………………………………….

48. 2012.04.01 ல் S.T குத்தகை கம்பனியிடம் இருந்து A.B கம்பனி ரூபா 1000,000 நியாயமான பெறுமதி கொண்ட இயந்திரம் ஒன்றினை நிதிக்குத்தகையில் கொள்வனவு செய்தது. முதலாவது தவணைக்கட்டணம் ரூபா 200,000 2013.03.31 இல் செலுத்தப்படல் வேண்டும். இத்தவணைக் கட்டணத்தினுள் உள்ளடங்கியுள்ள வட்டித்தொகை ரூபா 1000000 ஆக இருந்தது. 2014.03.31 ல் செலுத்தப்பட வேண்டிய 2ம் தவணைக் கட்டணத்தினுள் உள்ளடங்கியுள்ள வட்டித் தொகை ரூபா 80,000 ஆகும்.

1. A.B கம்பனி ஏட்டில் 2012.04.01 இல் இயந்திரம் கொள்வனவின் போதான குறிப்பேட்டுப் பதிவு.

   ……………………………………………………………………………………………

   ……………………………………………………………………………………………...

2. A.B கம்பனி ஏட்டில் 2012.03.31 இல் ஐந்தொகையில் உருப்படி

   1. நடைமுறையல்லாப் பொறுப்பு ……………………………………………

   2. நடைமுறைப் பொறுப்பு ………………………………………………..

3. A.B கம்பனி ஏட்டில் இவ்இயந்திரம் சொத்தாக ஏற்பிசைவு செய்ய அடிப்படையினை வழங்கும் எண்ணக்கரு?

   ……………………………………………………………………………………………

4. A.B கம்பனி ஏட்டில் இவ்இயந்திரம் சொத்தாக ஏற்பிசைவு செய்வதனால் பாதுகாக்கப்படும் நிதிக்கூற்றின் தரரீதியான பண்பு?

   …………………………………………………………………………………………..

49. 2011.04.01 இல் ஆரம்பிக்கப்பட்ட கம்பனியொன்று 2012.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் ரூ. 250,000 என அறியத்தருகிறது. 2012.03.31 ல் உள்ள மொத்தச் சொத்துக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது. இத்தினத்தில் எதுவித பொறுப்பும் இருக்கவில்லை. உபகரணம் (கிரயம் ரூ.640,000) 600,000 சரக்கிருப்பு ரூபா100,000 காசு ரூ. 350,000 கடன்பட்டோர் ரூ. 60,000 ஆகும்.
2012.03.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கு செயற்பாட்டு நடவடிக்கையினால் உருவான காசு?

…………………………………………………………………………………………………….

50. "செயற்பாட்டு நடவடிக்கையினால் உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சலானது அதே காலப்பகுதியில் இலாபத்தை நிறுவனம் ஈட்டியுள்ளது என்பதனை கட்டாயமாக குறித்து நிற்கும்" இக்கூற்றுடன் உடன்படுகிறீரா? காரணத்தினைத் தருக?

…………………………………………………………………………………………………….

கணக்கீடு **வினாத்தாள் I** **விடைகள்**

1 - 1	11 - 3	21 - 3
2 - 1	12 - 5	22 - 3
3 - 4	13 - 2	23 - 2
4 - 1	14 - 3	24 - 2
5 - 5	15 - 5	25 - 3
6 - 4	16 - 3	26 - 3
7 - 5	17 - 3	27 - 3
8 - 4	18 - 3	28 - 2
9 - 3	19 - 3	29 - 4
10 - 3	20 - 2	30 - 2

31\. I. 1. மூலதன கணக்கை நிலையாக பேணலும் அன்றாட கொடுக்கல் வாங்கலை பதிவு செய்தலும்.

2\. ஏனைய பங்காளரின் அனுமதியின்றி மீளப்பெறல்.

II. 1. மூலதனமிடல், மீளப்பெறலை பதிவு செய்தல்.

2\. ஏனைய பங்காளரின் அனுமதியின்றி மீளப்பெறமுடியாது.

32\. காசுக் கணக்கு வரவு 40,000

மூலதனக் கணக்கு செலவு 40,000

33\. ரூ 400,000
ரூ 40,000

34\. ரூ 420,000

35\. ரூ 6,000

36\. ரூ 100,500

37\. I. நாட்குறிப்பு கைச்சாத்து – முறையான நாட்குறிப்பு

II.பற்றுச்சீட்டு - காசேடு

III.நாட்குறிப்பு கைச்சாத்து – முறையான நாட்குறிப்பு

IV. நாட்குறிப்பு கைச்சாத்து – முறையான நாட்குறிப்பு

38\. இல்லை, 1890ஆம் ஆண்டு பங்குடமை சட்டத்தின் 42 ஆம் பிரிவின்படி 5% வட்டிபெற உரித்துடையவர்.

39\. ரூ 990,000, ரூ 324,000

40\. ரூ210,000

41\.

1	√
2	√
3	√
4	x

42\. I. இலாப நட்டக் கணக்கு வரவு 50,000
சொத்துக்கணக்கு செலவு 50,000

II. சொத்துக்கணக்கு வரவு 75,000
மிகைமதிப்பீட்டுக் கணக்கு செலவு 75,000

43\. ரூ 310,000

44\. ரூ 57,000
ரூ 82,000

45. 360,000 ஆல் அதிகரிப்பு
46. 1000 ஆல் குறைவடையும்
47. 30 நாட்கள்
48. 1. இயந்திர கணக்கு வரவு 1,000,000
குத்தகைக் கம்பனிக் கணக்கு செலவு 1,000,000
2. A) ரூ 780,000
B) ரூ 120,000
3. கணக்கீட்டு யதார்த்த எண்ணக்கரு
4. நம்பகத்தன்மை

49. ரூ 250,000
50. இல்லை
அட்டுறு அடிப்படை
காசு அல்லாத விடயம்

The National e-learning Portal for The General Education